www.padippakam.com

60680248

# தோழர் பத்மநாபா மறைவு!

# ஒரு சகாப்தத்தின் முடிவு!



தோற்றம் 19.11.1951 மறைவு 19.6.1990

படிப்பகம்

www.padippakam.com



**ஆம்! எமது இன்னுயிர்த் தோழர், செயலாளர் நாயகம் பத்மநாபா அவர்கள் பௌதிகரீதியாக இந்த நிலவுலகில் இன்றில்லை. ஈழ மக்களின் விடுதலைக்காக உழைத்த அந்த மாபெரும் நிறுவனத்தின் உயிர் பாசிச விடுதலைப் புலிகளால் பறிக்கப்பட்டுவிட்டது. மக்களை நேசித்த அம்மகத்தான மனிதனின் மூச்சுக்காற்றைப் பறித்து விட்டார்கள்.**

தோழர் பத்பநாபாவின் இழப்பு எம்மைப் பொறுத்தவரை ஈடுசெய்யமுடியாதது. ஏன், தெற்காசியாவிலேயே முக்கியமான ஓர் இடதுசாரித் தலைவர் அவர். மாக்சிய – லெனினிய சித்தாந்தத்தில் உறுதியான பற்றுள்ள தோழர் பத்மநாபா வரட்டுவாதங்களை நிராகரித்தவர். நடைமுறைச் செயற் பாடுகளில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டவர். தான் கொண்ட கொள்கையில் வளைந்து கொடுக்காத உறுதி படைத்தவர்.

ஈழ தேசத்தின் விடிவுக்கான போராட்ட வரலாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னனியின் வரலாறு, தோழர் பத்ம நாபாவின் வரலாறு – இவை பிரிக்கப்படமுடியாதவை.

அவர் ஒரு மகத்துவம் மிக்க தலைவனுக்கு, புரட்சிவாதிக்கு என்ன குணாதிசயங்கள் இருக்க வேண்டுமோ அத்தனையும் ஒருங்கே அமையப்பெற்றவர்.

- ஈழ தேச மக்களின் விடுதலைக்கப்பால் தோழர் பத்மநாபாவிற்கு வேறெந்த நலன்களும் இருந்ததில்லை.
- அவருடைய சொந்த வாழ்க்கை ஒரு சாமானிய மனித னுடையதைப் போன்று எளிமையானது.

படிப்பகம்

www.padippakam.com



- அவரது தன்னம்பிக்கை, விடாமுயற்சி என்பவை அசாதாரண மனிதனுக்குரியவை.
- தோழர்களை கண்டிக்கும்போதுகூட அவருடைய தோற்றத்தில் கடுமையை பார்க்க முடியாது.
- எப்போதும் ஆழ்ந்து சிந்திப்பனவாக அவருடைய கண்கள் தோன்றும், தோழர்களை – மக்களை பரிவுடன் நோக்கும்.
- ஆம், அவர் மனித குல வாழ்க்கையின் வெற்றிக்காகப் போராடினார். தம் உடல், பொருள், ஆவி அத்தனை யையும் அர்ப்பணித்துவிட்டார்.

ஒரு மனிதன் வாழும் காலத்தில் அவன் எப்படி வாழவேண்டும் என்று தமது வாழ்நாளில் தோழர் பத்மநாபா தமது நடைமுறை மூலம் போதனை செய்தார்.

இடையறாத ஸ்தாபனக் கடமைகளுடன் சாதாரண மக்களின் அன்றாட இன்பதுன்பங்களில் தோழர் பத்மநாபா பங்குபெறத் தவறமாட்டார்.

போராட்ட வாழ்க்கையின் பெரும்பாலான காலம் அவருக்கு பசி, பட்டினி, உறக்கமின்மையுடன்தான் கழிந்தன.

அவர் அதிகம் பேசமாட்டார். ஆனால் தமது நடைமுறை மூலம் ஆயிரமாயிரம் விடயங்களைத் தோழர்களுக்குப் போதித்துவிடுவார்.

தோழர் செயலாளர் நாயகம் அவர்கள் எஸ். ஜி. (S.G.) தோழர் என்று தோழர்களால் அன்பாக அழைக்கப் படுவார்.

ஈழ மக்களே! பாசிசப் புலிகள் எத்தகைய கொடுமையை, எத்தகைய இழப்பை உங்களுக்கு ஏற்படுத்திவிட்டார்கள். விடிவை நோக்கிய எமது மக்களின் எதிர்காலப் போராட்டப் பாதையில் எதிரியினால் சந்திக்கப்போகும் கொடூரங்கள் உங்களுக்கு அதை உணர்த்தும்.

படிப்பகம்

www.padippakam.com



யாழ்குடா நாட்டின் காங்கேசன் துறை மண்ணில் 1951–ல் பிறந்த தோழர் அவர்கள் தமது பள்ளி நாட்களிலேயே ஈழ மக்களின் விடுதலைக்கான போராட்டத்தில் ஆர்வமும் பங்களிப்பும் கொண்டிருந்தார். அவரது 39 வருட வாழ்நாளில் இருபது ஆண்டுகள் ஈழதேச மக்களுக்காக தம்மை அர்ப்பணித்திருந்தார்.

ஆரம்பத்தில் தமிழ் மாணவர் பேரவையில் தமது செயற் பாடுகளை ஆரம்பித்தார். பின்னர் ஈழவிடுதலை இயக்கத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராக செயற்பட்டார். ஈழ விடுதலை இயக்கத்தின் செயற்பாடுகளை சிங்களப் பேரினவாத அரசு சீர்குலைத்ததன்பின் ஈழதேச விடுதலையுடன், சுரண்டல், சாதி, பெண் அடிமைத்தனத்தை அடியோடு தகர்த்தெறியும் பொது வுடமைச் சமுகத்தைப் படைக்கும் எழிலார்ந்த நோக்கத்தோடு ஈழப்புரட்சி அமைப்பாளர்களில் ஒருவரானார். ஈழப்புரட்சி அமைப்பாளர்கள் தம்மை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியாக மாற்றி அமைத்தபோது, 1981 அக்டோபர் மாத அமைப்பாளர் மாநாட்டில் செயலாளர்நாயகமாகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஆரம்பகாலத்திலிருந்தே இந்திய – இலங்கை தேசப்பற்றாளர்கள், ஜனநாயக சக்திகள், இடதுசாரிச் சிந்தனையாளர்கள், புரட்சி யாளர்கள், முற்போக்கு கலை இலக்கியகர்த்தாக்கள் ஆகியோ ருடன் அன்னியோன்யமான உறவைப் பேணி வந்தார்

லெபனானில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்திடம் யுத்தப்பயிற்சி பெற்றவரும் தலைசிறந்த சர்வதேசியவாதியுமான தோழர் அவர்கள் உலகின் இனவெறி, நிறவெறி, சியோனிசத்திற் கெதிரான உறுதியான போக்கைக் கொண்டிருந்தார்.

அணிசேரா இயக்கம் பற்றியும், ஏகாதிபத்திய எதிர்ப்பு இந்தியாவிலும் அதிக பற்றார்வம் கொண்டிருந்தார்.

ஈழதேசத்தின் தொழிலாளர்கள், சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட கூலி விவசாயிகள், ஈழநாட்டு மீனவர்கள், நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைக்கும் மக்கள், மாணவர்கள், இளைஞர்கள், புத்தி ஜீவிகளுடன் இரண்டறக்கலந்து பழகினார்.

படிப்பகம்

www.padippakam.com



ஈழ விடுதலை இயக்கங்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்த இடையறாது பாடுபட்டார். இவை உருச்சிதைந்து அழிந்த போதெல்லாம் அதிக பிரயாசையுடன் முனைந்தார்.

எமது பிரதான எதிரி புலிகளல்ல, சிங்களப்பேரினவாத அரசே என வலியுறுத்துவார். அவர்களைக்கூட ஐக்கியப்பட்டுப் போராட அழைத்தார்.

ஆனால் தவறென்று தெரிந்த் எவற்றையும் தவறென்று கூற அவர் தயங்கியதில்லை.

**ஒரு தலை சிறந்த கம்யூனிஸ்ட் ஒடுக்கப் பட்ட, சுரண்டப்பட்ட மக்களின் நியாயங் களுக்காகப் போராடுபவன். அவன் தன்னைப் பாதுகாப்பதற்காக மக்களுக் குரிய நியாயங்களை கைவிட்டுவிட முடியாது.**

1986-ம் ஆண்டு ஸ்ரீலங்கா இனவெறிப்படைகள் தமிழ்மக்கள் மீது முற்றுகை யுத்தத்தை உக்கிரப்படுத்தியிருந்த வேளையில், அப்போது இந்தியாவில் தஞ்சமடைந்திருந்த புலிகள் குழுத் தலைமையானது டெலோ இயக்கப் போராளிகளைக் கொன்று குவித்தபோது ஈழத்தில் தங்கியிருந்த எமது தோழர் பத்மநாபா அவர்கள் அப்போராளிகளையும் அதன் தலைவர் சிறிசபா ரத்தினத்தையும் காப்பாற்ற தீவிர முயற்சிகளை மேற் கொண்டார். இனவெறிப்படைகளின் முற்றுகை யுத்தம் ஒருபுறம், புலிகளின் மிலேச்சத்தனமான சகோதரப்படுகொலைகள் மறுபுற மாக எமது மக்கள் வாயடைத்து மௌனிகளானபோது, இப்படு கொலைகளைக் கண்டித்து நெஞ்சுறுதியோடும் நேர்மைத் திறனுடனும் ஊர்வலங்கள், கடையடைப்புக்களை தலைமை தாங்கி நடத்தினார்.

எமது மக்கள் கோழைகளாக, அடிமைகளாக வாழக்கூடாது. எமது மண்ணில் சுதந்திர புருஷர்களாக வாழவேண்டும் என்ற

படிப்பகம்

www.padippakam.com



தோழர் பத்மநாபாவின் இலட்சியக் கனவின் பிரதிபலிப்புக்கள் அவை.

பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் கடத்தப்பட்டபோது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எதிர்ப்பு இயக்கம் நடத்தியது.

அதே வேளை சிங்கள மக்களுக்கெதிரான இனவெறி நடவடிக்கைகளை அவர் வன்மையாகக் கண்டித்தார்.

முஸ்லீம் – தமிழ் முரண்பாடுகளை தூண்டுவோரை அம்பலப் படுத்தினார்.

தென்னிலங்கை முற்போக்கு, ஜனநாயக, புரட்சிகர சக்திகளுடனான உறவை வளர்ப்பதில் முன்முயற்சிகளை மேற் கொண்டார் – ஆர்வமுடன் ஐக்கியப்பட்டு நின்று செயற் பட்டார்.

இலங்கையில் நடக்கவிருக்கும் புரட்சியில் மலையக மக்களின் பங்களிப்பில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டிருந்தார்.

ஒரே சமயத்தில் பல்வேறு விடயங்களை அவதானித்து காரியமாற்றும் திறமை அவருக்கிருந்தது.

இந்திய – இலங்கை சமாதான ஒப்பந்தத்தின்பின் ஈழப் பிரதேசத்தில் அமைதி, சமாதானம், ஜனநாயகத்தை நிலை நாட்டுவதற்காக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயற்பாடுகளில் தலைமை வழங்கி செயற்பட்ட தோழர் அவர்களின் பங்கு மகத்தானது.

இவை எல்லாவற்றிற்கும் மத்தியில், தான் காதலித்த ஆனந்தியை ஒரு வருடத்திற்கு முன்னர்தான் திருமணம் செய்துகொண்டார். சராசரி மனித வாழ்விற்கு அப்பாற்பட்ட வரட்டுத்தனங்கள் அவரிடம் இருக்கவில்லை. சில மாதங்களின் முன்னர் மரணித்த தனது தாயின் ஈமச் சடங்கில் அத்தனை நெருக்கடிகள் மத்தியிலும் கலந்துகொண்டார்.

படிப்பகம்

www.padippakam.com



சாதாரண மனிதரின் அன்றாட இன்ப துன்பங்களை உய்த் துணரும் திறன் கைவரப்பெற்ற தோழர் அவர்கள் ஒரு தலைசிறந்த மனிதர்.

முதிர்ந்த அனுபவமிக்கவர்கள் கருத்துக்களை தன்னடக்கத்துடன் கேட்டுக்கொள்வார்.

தமிழகத்தின் அனுபவமிக்க அரசியற் தலைவர்கள், முற்போக்கு சிந்தனையாளர்களை அவர் எப்போதும் கண்ணியத்துடன் மதித்து வந்திருக்கிறார்.

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களின் இயக்கங் களிடையேயான ஐக்கியத்திற்கான ஆரம்பகால முயற்சிகளில் உணர்வு பூர்வமாக பங்களித்திருக்கிறார்.

**ஆனால் தமிழக மண்ணில் அவருடைய உடல் பாசிசப் புலிகளால் இரத்தத்தில் மூழ்கடிக்கப்பட்டது. ஒரு நேர்மையான தமிழர் – தலை சிறந்த போராளி – தலைவர், இவருடைய உடல் தமிழக மண்ணில் வீழ்ந்துவிட்டது.**

**மனித நியாயங்களுக்காக பல்லாயிரம் ஆண்டுகளாக போராடிய தமிழகமே!**

**ஆசியாவின் ஆன்மீக கலாச்சாரத்தின் தொட்டிலான பாரதமே!**

**இம்மாபெருமனிதன் மரணத்துக்காக என்ன செய்யப்போகிறாய்?**

படிப்பகம்

www.padippakam.com



"நாம் மக்களுக்காகப் போராடுவது
எம்மீது சுமத்தப்பட்ட கடமையே தவிர
எமக்கு வழங்கப்பட்ட அதிகாரமல்ல"

— தோழர். க. பத்மநாபா.

"நாம் மக்களில்லாத மண்ணை நேசிக்கவில்லை;
மக்களுக்காகவே மண்ணை நேசிக்கிறோம்".

— தோழர். க. பத்மநாபா

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

22.06.1990.

படிப்பகம்